C.C.No. 155/2018 26.02.2024.

PW - 4 Banupriya S/O. Shankar

**(சாட்சி சத்தியப்பிரமானம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது.)**

**குறுக்கு விசாரணை: (எதிரிகள் தரப்பில்)**

உங்களுக்கும் உங்கள் கணவருக்கு எந்த வருடம் திருமணம் நடைபெற்றது என்றால் வருடம் எனக்கு தெரியாது ஆவணி மாதம் 4ம் தேதி. உங்கள் கணவரின் அக்கா செந்தாமரைக்கு எந்த வருடம் திருமணம் நடந்தது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. அசா1 ற்கும் உங்கள் கணவருக்கும் எத்தனை வருடம் வயது வித்தியாசம் என்றால் தெரியாது, உங்கள் கணவரின் சகோதரி அ.சா1ற்கும் அவருடைய கணவரான 1வது எதிரிக்கும் குடும்ப வாழ்க்கையில் என்ன பிரச்சனை ஏற்பட்டது குறித்து உங்களுக்கு நேரடியாக தெரியாது என்றால் எனக்கு தெரியாது. உங்கள் திருமணம் ஆகும்போதே அசா1ற்கு 2 குழந்தைகள் இருந்தது என்றால் ஆமாம். அசா1ற்கும் அவருடைய கணவரான 1வது எதிரிக்கும் நிதிமன்றம் மூலம் விவாகரத்து தீர்ப்பு ஏற்பட்டது என்றால் ஆமாம். அசா1ற்கு திருமணத்தின்போது என்ன சீர்வரிசைகள் போடப்பட்டது அது குறித்து உங்களுக்கு நேரடியாக தெரியாது என்றால் ஆமாம். அசா1 ன் கணவரான 1வது எதிரி வெளிநாட்டிற்கு சென்று வந்தபிறகுதான் இந்த புகார் மனு கொடுக்கப்பட்டது என்றால் ஆமாம். அசா1ற்கும் ஒரு ராமச்சந்திரன் என்பவருக்கும் தவறான தொடர்பு உள்ளதாக அ.சா1ற்கு அவருடைய கணவரான 1வது எதிரிக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அசா1 திருமணத்திற்கு பிறகு எவ்வளவு நாட்கள் கழித்து தந்தையின் வீட்டிற்கு வந்தார் என்றால் எனக்கு திருமணம் ஆன நாள் முதல் அ.சா1 எங்களுடன் தான் இருக்கிறார்

அசா1ன் கணவரான 1வது எதிரி ஊர் வஞ்சிப்பட்டி என்றால் ஆமாம். 1வது எதிரி சின்னகொட்டாம்பட்டிக்கு வந்ததில்லை என்று சொன்னா் தவறு வந்துள்ளார். அசா1ன் தவறான நடத்தையின் காரணமாக சின்ன கொட்டாம்பட்டிக்கு 1வது எதிரி வந்து பிரச்சனை செய்தார். மேற்படி பிரச்சனை தவித்து வேறு எதற்கும் 1வது எதிரி சின்ன கொட்டாம்பட்டிக்கு வந்ததில்லை என்றால் ஆமாம். 1வது எதிரி மது அருந்திவிட்டு அசா1யை அடித்து கொடுமைப்படுத்தியதாக சொல்வது உண்மையல்ல, அசா1 உங்களுக்கு நாத்துனார் என்ற உறவு முறையின் அடிப்படையில் அசா1ற்கு ஆதராவாக பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.